# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.1 நாள் 16.06.2026

| SC. No. | 122/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | பரமசிவம் க. | த/பெ. | கலியபெருமாள் |
| வயது | 59 | தொழில் | வழக்கறிஞர் |
| கிராமம் | உத்தண்டராயன்பேட்டை | தாலுக்கா | மயிலாடுதுறை |

**(எதிரிகள் ஆஜர், ).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் உத்தண்டராயன்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் தற்போது வழக்கறிஞராக வேலை செய்து வருகிறேன். 04.03.2016 அன்று மதியம் 12.00 மணிக்கு நீதிமன்றத்திலிருந்தபோது எனது வீட்டிற்கு 5 எதிரிகளும் இரும்பு பைப்புடன் சென்று ரோட்டில் நின்றுக்கொண்டு தரக்குறைவான வார்த்தைகளால் திட்டி வெளியே வாடா என்று சொன்னார்கள். அதற்கு என் மனைவி எதற்கு திட்டிகிறீர்கள் என்று கேட்டு நான் வீட்டில் இல்லை என்று சொல்லியிருக்கிறார். என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று என் மனைவியிடம் மிரட்டி விட்டு சென்றுவிட்டனர். வீட்டிற்கு சென்றபோது இரவு சுமார் 9.00 மணிக்கு என் மனைவி நடந்த சம்பவத்தை என்னிடம் சொன்னார். பின்பு, நான் வீட்டில் சாப்பிட்டுவிட்டு அன்றையதினமே இரவு 9.45 மணிக்கு மணல்மேடு காவல்நிலையத்திற்கு சென்றபோது மதகடி பட்டவர்த்தியில் எனது உறவினர் மாயவன் வீட்டில் இருச்சக்கர வாகனத்தை நிறுத்தினேன். அவர் வீடு பூட்டியிருந்ததை பார்த்து கிளம்பலாம் என்று இருந்தபோது 5 எதிரிகளும் கையில் இரும்பு பைப்புடன் ஓடி வந்தனர். அருகிலிருந்து கலியமூர்த்தி வீட்டிற்கு சென்றுவிடலாம் என்று ஓடினேன். வெங்கடேசன் என்னை வழிமறித்தார், நாகலிங்கம் என்னை அடித்துக்கொல்லுங்கள் என்று அவர்களிடம் சொன்னார். 1ம் எதிரி வெங்கடேசன் இரும்பு பைப்பால் தலையில் ஓங்கி அடித்தார். 2ம் எதிரி எண்ணரசு கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் என்னை ஓங்கி இடது கால் முட்டியில் அடித்தார். 3ம் எதிரி சரவணன் இரும்பு பைப்பால் இடது கால் தொடையிலும், வயிற்றிலும்,

CJM, MAYILADUTHURAI.

மார்பிலும், இடது கை தோள்பட்டையிலும் அடித்தார். 4ம் எதிரி காமராஜ் இரும்பு பைப்பால் வலது கால் தொடையிலும், வலது கையிலும், மார்பிலும், முகத்திலும் அடித்தார். முகத்தில் அடித்ததில் முன்பக்க கீழ்பற்கள் நான்கும் ஆட்டம் கண்டுவிட்டது. எதிரிகள் அனைவரும் என்னை அடித்ததில் தலையில் மண்டை உடைந்தது, இடது கால் முட்டியில் எலும்பு முறிவு ஏற்பட்டது, மற்ற உடல் முழுக்க பலத்த காயம் ஏற்பட்டது. 3ம் எதிரி சரவணன் Samsung cellphone– யை எடுத்துச்சென்றுவிட்டார். அந்த வழியாக வந்த சத்தியராஜ், நடராஜன், குருமூர்த்தி ஆகியோர் என்னை பார்த்து தூக்கினார்கள். இவர்கள் வருவதை கண்டவுடன் எதிரிகள் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என சொல்லி ஓடினார்கள். என்னை ராஜேந்திரன், சத்தியராஜ் ஆகியோர் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. நான் மருத்துவரிடம் என்னை 5 பேர் தாக்கியதாக சொல்லியுள்ளேன். நான் பின்னர், மேல்சிகிச்சைக்காக அன்றைய தினமே கும்பகோணத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்றேன். பின்பு, அங்கிருந்து தஞ்சாவூர் மீனாட்சி தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். அங்கு 5 நாள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். பின்பு, அங்கு போலீசார் வந்து விசாரித்து வாக்குமூலம் பெற்றனர். அந்த வாக்குமூலத்தில் நான் சொன்ன விஷயத்தில் அவர் வேண்டுமென்றே விட்டுவிட்டார். நான் கொடுத்த வாக்குமூலத்தில் காமராஜ் அடித்ததில் முன்பக்ககீழ் நான்கு பற்கள் உடைந்ததாக சொன்னதையும், சரவணன் எனது சட்டை பாக்கெட்டில் எனது Samsung செல்போனை திருடி சென்றதையும் விட்டுவிட்டு பதிவுசெய்து என்னிடம் கையொப்பம் பெற்றார். நான் படித்து பார்க்காமல் கையொப்பம் செய்துவிட்டோம். பின்பு, 5 மாதம் வீட்டிலேயே மருத்துவ சிகிச்சையில் இருந்தேன். பின்பு, என்னிடம் முறைகேடாக பெறப்பட்ட வாக்குமூலம் குறித்து பின்பு, 4 மாதம் கழித்து நான் காவல் நிலையம் சென்று போலீசாரிடம் முதல் தகவல் அறிக்கையை வாங்கி பார்த்தபோது தான் வாக்குமூலத்தில் விடுபட்ட விஷயம் தெரியவந்தது. பின்பு, இது குறித்து முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவிற்கும், உள்துறை செயலாளருக்கும், மத்திய மண்டல ஆய்வாளருக்கும், காவல் துறை கண்காணிப்பாளருக்கும், DGB அவர்களுக்கும், நாகப்பட்டின மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும், நாகப்பட்டின மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கும், மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும், மணல்மேடு உதவி ஆய்வாளருக்கும், மணல்மேடு ஆய்வாளருக்கும், மாண்புமிகு

CJM, MAYILADUTHURAI.

உயர்நீதிமன்ற நீதிபதிக்கும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற பதிவாளருக்கும் புகாரை பதிவு தபால் மூலமாக அனுப்பி வைத்தேன். மருத்துவமனையில் இருந்த போது உதவி ஆய்வாளர் என்னிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். மேற்கூறிய காவல் அதிகாரிகள், உயர்நீதிமன்ற நீதி அரசர்களுக்கு அனுப்பிய மறுபுகார் 30.06.2016 தேதியிட்டது **அ.சா.ஆ. 2** ஆகும். பின்பு, அனைவருக்கும் அனுப்பியதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **அ.சா.ஆ.3** வரிசை (எண்ணிக்கை 11) ஆகும். பின்பு, இவை அனைத்திலும் மேல்நடவடிக்கை எடுக்கப்படாததால் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில்தனிப்புகார் ஒன்று கு.வி.மு.ச. 200 கீழ் வெங்கடேசன், எண்ணரசு, சரவணன், காமராஜ், நாகலிங்கம் ஆகியோர் பெயரில் இ.த.ச 147, 148, 294(b), 324, 326, 506(ii), 379, 307, 341 கீழ் வழக்கு தாக்கல் செய்தேன்.

(அரசு தரப்பில் வழக்கு சொத்து குறியீடு செய்யவேண்டி முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது. )

Balamadhi

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.